விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 20 ஞாயிறு 05.09.2021 மலர் - 2, இதழ் - 152




# அறிவியல் மாணவர்களுக்கு அரிய வாய்ப்பு

விஜயபாரதம்

விஞ்ஞான பாரதி (VIBHA) அமைப்பு, விக்யான் பிரசார் மற்றும் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலுடன் இணைந்து, பள்ளி மாணவர்களுக்கு அறிவியல் மனப்பான்மையை வளர்க்க ‘வித்யார்த்தி விக்ஞான் மந்தன்’ என்ற ஒரு போட்டித் தேர்வை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த ஆண்டின் கருப்பொருள் ஆச்சார்யா பிரபுல்லா சந்திர ரேவை அடிப்படையாகக் கொண்டது. அவர், ஒரு மிகச் சிறந்த வங்காள வேதியியலாளர், கல்வியாளர், வரலாற்றாசிரியர், தொழிலதிபர், வள்ளல் என பெயர் பெற்றவர். பாரதத்தில் முதல் நவீன வேதியியல் ஆராய்ச்சி பள்ளியை நிறுவியவர். பாரத ரசாயன அறிவியலின் தந்தை என்று கருதப்படுபவர்.

பாரதத்தின் மிகப்பெரிய ‘அறிவியல் திறமை தேடல்’ போட்டியான இதில், சி.பி.எஸ்.இ, ஐ.சி.எஸ்.இ மற்றும் மாநில கல்வி வாரியங்களின் கீழ் படிக்கும் 6ம் வகுப்பு முதல் 11ம் வகுப்பு வரையிலான மாணவ மாணவியர் பங்கு பெறலம். இப்போட்டி என்.சி.இ.ஆர்.டியின் அறிவியல், கணித பாடப்புத்தகங்களின் பாடத்திட்டத்தை உள்ளடக்கியது.

வினாடி வினாவில் ஆச்சார்யா பிரபுல்லா சந்திர ரே, பாரத சுதந்திர போராட்டம், அறிவியல் சம்பந்தப்பட்ட கேள்வி பதில்கள் இடம் பெறும். தேர்வுகள், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆங்கிலம், இந்தி, மராத்தி, குஜராத்தி, பஞ்சாபி, பெங்காலி, ஒடியா மற்றும் அசாமி உள்ளிட்ட மொழிகளில் நடத்தப்படும்.

இத்தேர்வுகள், 30 நவம்பர் 2021 மற்றும் 5 டிசம்பர் 2021ல் நடத்தப்படும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், தேசிய அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் மையங்களுக்குச் செல்லவும், நாட்டின் புகழ்பெற்ற விஞ்ஞானிகளுடன் தொடர்பு கொள்ளவும் வாய்ப்பு கிடைக்கும். மேலும் விவரங்களுக்கு https://science.newsbharati.com/Encyc/2021/9/2/VidyarthiVigyanManthan.html என்ற இணையதளத்தை அணுகலாம்.



# பேட்டரி வாகனங்களுக்கு வரி தள்ளுபடி


விஜயபாரதம்

புதுச்சேரி சட்டப்பேரவையில் நடைபெற்ற மானியக் கோரிக்கையில் பேசிய போக்குவரத்து துறை அமைச்சர் சந்திரப் பிரியங்கா, 'மகளிர் மட்டும் பயணிக்க சி.சி. டி.வி பொருத்தப்பட்ட பிங்க் பேருந்துகள் வாங்கப்படும். சனிக்கிழமை அன்று பெண்களுக்கு என்று தனியாக ஓட்டுநர் உரிமம் வழங்கும் நாளாக அறிவிக்கப்படும். மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கவும் காற்று மாசுபடுவதைக் குறைக்கவும் ஏதுவாக, அனைத்து மின்சார வாகனங்களுக்கும் 50 சதவீத சாலை வரி தள்ளுபடி அளிக்கப்படும். மின்சாரத்தில் இயங்கும் இ ரிக்ஷா பயன்பாட்டைக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படும். மத்திய அரசு திட்டத்தின் கீழ் 200 புதிய பேருந்துகள் வாங்கப்படும்' என தெரிவித்தார்.

# அறநிலையத்துறை அமைச்சர் அறிவிப்பு

சட்டசபையில் ஹிந்து அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு சில அறிவிப்புகளை வெளியிட்டார். அதில், 'கோயில்களில் மொட்டை அடிப்பதற்கு நாளை முதல் கட்டணம் கிடையாது. ஒரு கால பூஜை திட்டத்தின் கீழ் உள்ள 12,959 திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு மாத ஊக்கத் தொகையாக ரூ.1,000 வழங்கப்படும், இந்த ஆண்டு இறுதிக்குள் கோயிலுக்கு சொந்தமான 1,000 கோடி ரூபாய் சொத்துகள் மீட்கப்படும், அர்ச்சகர், ஓதுவார்களுக்கு பயிற்சி கால ஊக்கத்தொகை 3 ஆயிரம் ரூபாயாக உயர்வு, வடலூரில் வள்ளலார் சர்வதேச மையம், தமிழகத்தில் 10 இடங்களில் கலை, அறிவியல் கல்லூரிகள், தைத் திருநாளில் அர்ச்சகர்களுக்கு ஊழியர்களுக்கு புத்தாடை, திருத்தணி, சமயபுரம், திருச்செந்தூரில் நாள் முழுவதும் அன்னதானம், கோயில் பாதுகாப்புக்கு 10 ஆயிரம் பாதுகாப்பு பணியாளர்கள் நியமனம்' என்பது போன்ற அறிவிப்புகள் இடம் பெற்றுள்ளன.

விஜயபாரதம்







விஜயபாரதம்

# இதற்கு தடை இல்லையா?

அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு தமிழக சிறைகளில் 14 ஆண்டுகளுக்கு மேல் உள்ள முஸ்லிம்களையும், 7 தமிழர்களை விடுதலை செய்யக்கோரி இரு தினங்களுக்கு முன் இந்திய தேசிய லீக் கட்சி பாளையங்கோட்டையில் சிறைச்சாலை முற்றுகை போராட்டம் நடத்தியது. இதில் அக்கட்சியின் தலைவர்களுடன் வேறு சில அரசியல் கட்சியினர், முஸ்லிம் அமைப்பு நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இவர்கள் அனைவரும் அரசு விதித்த அனைத்துக் கட்டுப்பாடுகளையும் மீறியும், சமூக இடைவெளி இன்றியும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் விடுதலை செய்யக் கோரியது, குண்டு வெடிப்பு நிகழ்த்தி அப்பாவிப் பொதுமக்களை கொன்று குவித்த முஸ்லிம் பயங்கரவாதிகளையும், மறைந்த பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியை கொன்றவர்களையும்தான். இப்படி பயங்கரவாதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வெளிப்படையாகவே தேசத்துக்கு எதிராக போராட்டம் நடத்தியுள்ளன இந்த அமைப்புகள். அதற்கு அனுமதி அளித்ததுடன் பாதுகாப்பும் கொடுத்துள்ளது விடியல் அரசு. ஆனால், ஹிந்துக்களை வஞ்சிப்பதிலும், ஹிந்துக்களின் திருவிழாக்களை தடுப்பதிலும் கண்ணும் கருத்துமாக செயல்பட்டு வருகிறது.

---

# வேலூர் இப்ராஹிம் குற்றச்சாட்டு



விஜயபாரதம்

பா.ஜ.க சிறுபான்மையினர் பிரிவின் தேசிய செயலாளர் வேலூர் இப்ராஹிம், 'தி.மு.க, ஹிந்து மத நம்பிக்கைகளுக்கு எதிராக செயல்படுகிறது. வாரம் மூன்று நாட்கள் ஹிந்து கோயில்கள் திறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், மதுக்கடைகளை திறந்து வைத்திருப்பது கேலிக்கூத்து. பொது சொத்துக்கள், உட்கட்டமைப்பு நிலங்களை தனியாருக்கு குத்தகைக்கு விடுவதை, மத்திய அரசு தனியாருக்கு விற்கிறது என சட்டசபையில் முதல்வர் ஸ்டாலின் திரித்துக் கூறியது கண்டிக்கத்தக்கது. காங்கிரஸ் ஆட்சியின் போது, எண்ணெய் நிறுவனங்களுக்கு, ரூ. 3 லட்சம் கோடி கடன் வைத்துவிட்டு சென்றுவிட்டது. அதனை தற்போது மத்திய அரசு செலுத்தி வருகிறது. தமிழகத்தில் மதவாத பிரச்னையை துாண்டுபவர்களின் கை ஓங்கியுள்ளது. இவர்கள், இளைஞர்களை மூளைச்சலவை செய்து பயங்கரவாதிகளாக மாற்றுகின்றனர். விநாயகர் சதுர்த்தி விழாவை கட்டுப்பாடுகளுடன் நடத்த அனுமதிக்க வேண்டும். மாநில பா.ஜ.க நிர்வாகிகளுக்கு தமிழக அரசு உரிய பாதுகாப்பு அளிப்பதில்லை' என கூறினார்.

# நடிகையின் திமிர்



விஜயபாரதம்

மத்திய பிரதேசம் நர்மதா நதிக்கரையில் மணிரத்னத்தின் இயக்கத்தில் 'பொன்னியின் செல்வன்' படப்பிடிப்பு நடைபெற்றது. அப்போது, 1767ல் ராணி அகல்யா பாயால் நிறுவப்பட்ட சிவலிங்கத்தின் அருகே நடிகை திரிஷா செருப்பு அணிந்து நடந்து சென்றார். இந்த புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகின. ஹிந்துக்கள் வணங்கும் சிவபெருமானை திரிஷா அவமதித்ததை அறிந்த பல ஹிந்து அமைப்புகள் அவரின் இச்செயலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. இதனால் நடிகை த்ரிஷாவையும், இயக்குநர் மணிரத்னத்தையும் கைது செய்ய வேண்டும் என ஹிந்து மண்டல் அமைப்பு ஹரிஷ்கேஷ்வர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளது. இதுவரை திரிஷாவோ மணிரத்தினமோ இதற்கு வருத்தம் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

---

# ஸ்டாலின் அறிவிப்புகள்



விஜயபாரதம்

வ.உ.சியின் 150வது பிறந்த நாள் விழா, அரசு சார்பில் கொண்டாடப்படும்' என தமிழக அரசு அறிவித்தது. அதனை முன்னிட்டு தமிழக முதல்வர் ஸ்டாலின் 14 அறிவிப்புகளை வெளியிட்டார். அதில், துாத்துக்குடி மாநகரில் முதன்மை சாலையான மேலபெரிய காட்டன் சாலை, இனி 'வ.உ.சிதம்பரனார் சாலை' என அழைக்கப்படும், ஒட்டப்பிடாரத்தில் அவர் வாழ்ந்த நினைவு இல்லமும், திருநெல்வேலியில் உள்ள மணி மண்டபமும் புனரமைக்கப்படும். அங்கு அவரது வாழ்க்கை வரலாற்றை மக்கள் அறியும் வகையில், ஒலி ஒளி காட்சிகளக அமைக்கப்படும். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலையில், வ.உ.சிதம்பரனார் பெயரில் புதிய ஆய்விருக்கை அமைக்கப்படும். 'கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி., விருது' ஆண்டுதோறும் வழங்கப்படும். தமிழ் நிகர்நிலை கல்விக் கழகம் வாயிலாக, அவர் எழுதிய நுால்கள், கையெழுத்துப் பிரதிகள் இணையதளத்தில் மின்மயப்படுத்தி வெளியிடப்படும் என்பது போன்ற அறிவிப்புகள் இடம்பெற்றன. இதற்கு பல்வேறு தரப்பினரும் பாராட்டு தெரிவித்துள்ளனர். அதே நேரத்தில் வ.உ.சி துறைமுக வாசலில், உள்ள வ.உ.சியை கொடுமைப்படுத்திய ஆஷ் துரையின் நினைவிடத்தை அகற்றக் கோரும் தேசபக்தர்களின் வேண்டுகோளையும் நிறைவேற்றுவாரா முதல்வர் ஸ்டாலின்?

# பள்ளங்கள் இல்லாத சாலைகள்



விஜயபாரதம்

உத்தர பிரதேசத்தில் வரும் செப்டம்பர் 15 முதல் நவம்பர் 15, 2021 வரை, 'பள்ளங்கள் இல்லாத சாலைகள்' என்ற சிறப்பு இயக்கத்தை அம்மாநில அரசு நடத்துகிறது. இதில் மாநிலத்தில் உள்ள அனைத்து வகையான சாலைகளையும் குண்டு குழிகள் இல்லாதவாறு பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என உத்தரபிரதேச துணை முதல்வர் கேசவ் பிரசாத் மௌரியா தெரிவித்தார். மேலும், 'மாநிலத்தில் எங்கு கட்டுமானப் பணிகள் உரிய காரணம் இன்றி மெதுவாக இருந்தாலும், மூன்று நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட பொறியாளர்கள், ஒப்பந்தக்காரர்களுக்கு நோட்டீஸ் வழங்கப்பட வேண்டும். மெத்தனம் காட்டும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்தவொரு வேலையும் ஒப்பந்தக்காரர்களால் தேவையின்றி தாமதமாகிவிட்டால், அவர்களின் நிறுவனத்தை சட்ட விதிகளின்படி தடுப்புப்பட்டியலில் சேர்க்க வேண்டும். உ.பியை மற்ற மாநிலத்துடன்இணைக்கும் 105 வழித்தடங்களிலும் நுழைவு வாயில்கள் அமைக்கப்பட வேண்டும். அவற்றில் 'உத்தரபிரதேசத்திற்கு வருக, உத்தரபிரதேசத்திற்கு வந்ததற்கு நன்றி' என்ற வார்த்தைகள் எழுதப்பட வேண்டும்' என உத்தரவிட்டுள்ளார்.

# ஸ்வார்ம் டிரோன் ஒப்பந்தம்



விஜயபாரதம்

ஸ்வார்ம் டிரோன் எனப்படுவது பல டிரோன்களை ஒரு ஒற்றை நெட்வொர்க் அமைப்பாக ஒருங்கிணைத்து செயல்படுத்தும் தொழில்நுட்பம். இதில் ஒரு சில டிரோன்கள் முதல் ஆயிரக்கணக்கான டிரோன்களை இணைத்தும், பிரித்தும், ஒரே குழுவாகவும், பல குழுக்களாகவும் விருப்பத்திற்கேற்ப செயல்படுத்த முடியும். இதன் ஒரு கூட்டம் மாபெரும் சேதத்தை ஏற்படுத்தும் ஆற்றல் கொண்டது. வருங்கால போர்முறைகளில் இது முக்கிய இடம் பெறும். இதற்கு நமது பாரத ராணுவமும் வேகமாக தயாராகி வருகிறது. அவ்வகையில், பாரத ஸ்டார்ட் அப் நிறுவனமான நியூ ஸ்பேஸ் ரிசர்ச் அண்ட் டெக்னாலஜிஸ் நிறுவனத்துக்கு 100 ராணுவ தரத்திலான டிரோன்களை தயாரித்து வழங்கும் ஒப்பந்தத்தை பாரத ராணுவம் வழங்கியது. இதன் மதிப்பு 15 மில்லியன் டாலர்கள். லடாக் பகுதியில் பாரத சீனா இடையிலான மோதல் தொடங்கியபோது, மத்திய அரசு வழங்கிய அவசரகால கொள்முதல் அதிகாரங்களைப் பயன்படுத்தி ராணுவம் இந்த ஒப்பந்தத்தை வழங்கியது.

# என்.ஐ.ஏ. குற்றப்பத்திரிகை தாக்கல்


விஜயபாரதம்

பெங்களூருவில் உள்ள தேசிய புலனாய்வு முகமையான என்.ஐ.ஏவின் சிறப்பு நீதிமன்றத்தில் அல் ஹிந்த் வழக்கில் தொடர்புடைய ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிக்கு எதிராக என்.ஐ.ஏ துணை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது. அதில், பெங்களூருவை சேர்ந்த மெஹபூப் பாஷா, காஜா மொய்தீன் ஆகிய பயங்கரவாதிகள் பெங்களூருவை தளமாகக்கொண்டு இயங்கினர். காஜா மொய்தீன் என்ற பயங்கரவாதியின் வழிகாட்டுதலின்படி இவர்கள், ஹிந்து தலைவர்களையும் காவல்துறை அதிகாரிகளையும் கொலை செய்ய திட்டமிட்டதனர். முஸ்லிம் இளைஞர்களை ஐ.எஸ் பயங்கரவாத இயக்கத்தில் சேர்ப்பது, ஐ.எஸ்.ஐ.எஸ் சித்தாந்தத்தை பிரச்சாரம் செய்வது, ஆயுதங்கள், வெடிபொருட்களை சேகரிப்பது, அதற்காக நிதி சேகரிப்பு உள்ளிட்டவற்றில் ஈடுபட்டனர் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவர்கள் சேகரித்த ஆயுதங்கள்தான் தமிழக காவல்துறையின் எஸ்.எஸ்.ஐ வில்சனின் கொலையில் பயன்படுத்தப்பட்டன எனது குறிப்பிடத்தக்கது.

# சென்னை விளாடிவாஸ்டாக் திட்டம்


விஜயபாரதம்

ரஷ்யாவின் விளாடிவாஸ்டாக் நகரில் கிழக்கு பொருளாதார மாநாடு நடந்தது. இதில் வீடியோ கான்பரன்ஸ் வாயிலாக பங்கேற்ற பிரதமர் மோடி, 'பாரதம் ரஷ்யா இடையே நீண்ட கால நெருக்கமான நட்புறவு உள்ளது. இரு நாடுகளும் இணைந்து சர்வதேச எரிசக்தி சந்தையில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முடியும். கொரோனா தடுப்பூசியிலும் இரு நாடுகளின் ஒத்துழைப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. ரஷ்யாவின் யமால் முதல், விளாடிவாஸ்டாக் வரையும், அங்கிருந்து தமிழகத்தின் தலைநகர் சென்னை வரையிலும் நடைபெறும் எரிவாயு கடல்சார் தொழில் வழித்தட போக்குவரத்து திட்டப் பணிகளில் ஏராளமான இந்தியர்கள் பணியாற்றுகின்றனர். இப்பணி விரைவாக நடைபெற்று வருகிறது. தற்போது பாரதத்தின் மசகான் டாக்ஸ் நிறுவனம், ரஷ்யாவின் ஸ்வெஸ்டா நிறுவனத்துடன் இணைந்து கப்பல் கட்டும் பணியை மேற்கொண்டு வருகிறது. இவை மகிழ்ச்சி அளிக்கிறது' என பேசினார்.

# அமெரிக்கா செல்லும் ஓலா ஸ்கூட்டர்


விஜயபாரதம்

உலகின் மிகப்பெரிய மின்சார இரு சக்கர வாகன தொழிற்சாலையான ஓலாவின் அதிநவீன 'மேட்இன் இந்தியா' மின்சார ஸ்கூட்டர்கள், அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் என ஓலாவின் தலைமை நிர்வாக அதிகாரி பவிஷ் அகர்வால் தெரிவித்துள்ளார். பாரதத்தில் ஓலா எலெக்ட்ரிக் ஸ்கூட்டர்களின் விநியோகம் அக்டோபர் முதல் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# டிரக் ஸ்கேனர்

ஆப்கானிஸ்தான் நிலைமையைக் கவனத்தில் கொண்டு நமது நாட்டின் பாதுகாப்பை அதிகரிக்க, மத்திய அரசு, பாரத பாகிஸ்தானின் அட்டாரி எல்லையில் உள்ள ஒருங்கிணைந்த சோதனைச் சாவடியில் (ICP) தனது முதல் கதிர்வீச்சு கண்டறியும் கருவியை (RDE) நிறுவியுள்ளது. இக்கருவியால், சரக்கு வாகனங்களில் கொண்டு செல்லப்படும் ஆயுதங்கள், வெடிமருந்துகள், பிற சட்டவிரோத பொருட்கள் கதிரியக்க பொருட்களை கண்டறிய முடியும். எல்லைப் பாதுகாப்புப் படைகளுக்கு இந்த கருவி பேருதவியாக இருக்கும். தற்போது, பாகிஸ்தானுடனான வர்த்தகத்தை பாரதம் நிறுத்தி வைத்துள்ளது. எனினும், ஆப்கானிஸ்தானிலிருந்து வரும் சரக்கு வாகனங்கள் பாகிஸ்தானில் உள்ள அட்டாரி எல்லை வழியாக நமது நாட்டிற்குள் நுழைகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.


விஜயபாரதம்

# பொருளாதார வழித்தடத்துக்கு ஒப்புதல்

ராய்பூர் விசாகப்பட்டினம் பொருளாதார வழித்தடம் அமைப்பதன் ஒரு பகுதியாக தேசிய நெடுஞ்சாலை 130ஐ, ஆறு வழிச்சாலையாக மாற்றி அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. இவ்வழித்தடம் பாரதமாலா பரியோஜனா திட்டத்தின் கீழ் ரூ. 1,539 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். இந்த 464 கிமீ பொருளாதார வழித்தடம், சத்தீஸ்கரின் ராய்பூரில் தொடங்கி ஒடிசா வழியாக சென்று ஆந்திராவின் விசாகபட்டினத்தில் முடிவடைகிறது. 202425 க்குள் இதனை முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அப்பகுதிகளில் உள்ள பழங்குடியினர், பொருளாதாரத்தில் நலிவடைந்தோர், அப்பிராந்திய மக்கள் என அனைவரின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு இது ஒரு சிறந்த ஊக்கமாக இருக்கும் என கூறப்படுகிறது.


விஜயபாரதம்

# ஆசிரியர் இடைநீக்கம்


விஜயபாரதம்

சத்தீஸ்கரில் கிரோலா பஞ்சாயத்துக்கு உட்பட்ட அரசு நடுநிலைப்பள்ளியின் ஆசிரியர் சரண் மார்க்கம் என்பவர், கிருஷ்ண ஜெயந்தி அன்று, அப்பள்ளியில் பயிலும் ஹிந்து மாணவர்களில் எத்தனை பேர் கிருஷ்ண ஜெயந்தி விரதம் இருந்தனர் என கேட்டறிந்தார். பின்னர், விரதம் இருக்கும் மாணவர்கள் தனியாக அழைத்து கடுமையாகத் தாக்கியுள்ளார். மேலும், மாணவர்களிடம் கிருஷ்ணர், சரஸ்வதி போன்ற தெய்வங்களை நம்பக்கூடாது எனகூறி, கிருஷ்ணரை குறித்துத் தரக்குறைவாக பேசியுள்ளார். ஹிந்து கடவுள்கள் குறித்து பல பொய் தகவல்களையும் மாணவர்களிடம் பரப்பினார். இந்த வீடியோ சமீபத்தில் வெளியானது. பெற்றோர்களும் பொதுமக்களும் அவரை தண்டிக்க கிராம பஞ்சாயத்து அலுவலகத்தில் புகார் அளித்தனர். இதையடுத்து விசாரணை நடத்தி அவரை இடை நீக்கம் செய்துள்ளதாகவும் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது என்றும் ஆட்சியர் புஷ்பேந்திர குமார் மீனா கூறியுள்ளார்.



விஜயபாரதம்

# லடாக் பாதாமி ஏற்றுமதி

இயற்கை வேளாண் பொருட்கள் ஏற்றுமதிக்கு ஊக்கமளிக்கும் விதமாக, லடாக்கில் விளையும் பாதாமி எனப்படும் அப்ரிகாட் வகைப் பழங்கள் முதன்முறையாக துபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. உள்ளூரின் புதிய தொழில்முனைவோர்கள் இந்த ஏற்றுமதிகளை செய்தனர். அவர்களுக்கு, உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) தொழில்நுட்ப உதவிகளை வழங்கியது. லடாக்கில் சமீபகால வளர்ச்சிகளில் இது ஒரு முக்கிய மைல்கல். லடாக்கில் சுமார் 15,789 மெட்ரிக் டன் பாதாமி உற்பத்தி செய்யப்படுகிறது. அவற்றில் ஐந்து வகைகள் ஏற்றுமதிக்கு உகந்தவை. சீபக்தான் என்ற பழங்களும் ஏற்றுமதிக்காக அடையாளம் காணப்பட்டுள்ளது. இதைத்தவிர, மருத்துவ மதிப்பு கொண்ட பழங்கள், மூலிகைகளின் உற்பத்தியை மேம்படுத்துதல், புதிய வாய்ப்புகளை கண்டறிதல், விவசாயிகளின் திறன் மேம்பாடு, பொருட்களின் மதிப்பு கூட்டல், தொழில் முனைவோரை உருவாக்குதல் ஆகிய நடவடிக்கைகளை லடாக் நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது.

# ஆளில்லா வான்வெளி வாகன ஒப்பந்தம்

மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் அமெரிக்க பாதுகாப்பு துறை இணைந்து டிரோன் எனப்படும் ஆளில்லா வான்வழி வாகனத்திற்கான திட்ட ஒப்பந்தத்தில் (பி.ஏ) கையெழுத்திட்டது. பாதுகாப்பு தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக முன்முயற்சியின் (டி.டி.டி.ஐ) அடைப்படையில், பாதுகாப்பு தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் இரு நாடுகளும் ஒப்பந்தம் செய்துள்ளன. இந்த ஒப்பந்தம் ஜனவரி 2006ல் கையெழுத்திடப்பட்டது. எனினும், செயல்படுத்தப்படாமல் இருந்த இது மீண்டும் ஜனவரி 2015ல் புதுப்பிக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் கூட்டுத் தொழில்நுட்ப பரிமாற்றத்தை ஊக்குவிப்பது, பாரதம், அமெரிக்க ராணுவத்திற்கான எதிர்காலத் தொழில்நுட்பங்களின் இணை உற்பத்தி, இணை வளர்ச்சி, வாய்ப்புகளை உருவாக்குவது. டி.ஆர்.டி.ஓவின் ஏரோநாட்டிக்கல் டெவலப்மென்ட் எஸ்டாப்ளிஷ்மென்ட் (ஏ.டி.இ), பாரத விமானப்படை ஆராய்ச்சி ஆய்வகத்தின் ஏரோஸ்பேஸ் சிஸ்டம்ஸ் டைரக்டரேட் (ஏ.எப்.ஆர்.எல்) ஆகியவையும் இதில் இணைந்து பணியாற்றும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜயபாரதம்



# நான் எங்கும் தப்பி ஓடவில்லை



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானின் துணை அதிபர் அம்ருல்லா சலே, தலிபான்களுக்கு எதிரான நார்தர்ன் அலையன்ஸ் கட்டுப்பாட்டில் உள்ள பஞ்சஷீரில் தங்கியுள்ளார். அவர் தஜிகிஸ்தானுக்கு தப்பிச் சென்றதாக தலிபான்கள் வெளியிட்ட செய்திகளை மறுத்தார். 'நான் எங்கும் தப்பி ஓடவில்லை, நான் எனது மண்ணுக்காகவும், அதன் கண்ணியத்தை பாதுகாப்பதற்காகவும் இங்கு இருக்கிறேன். பஞ்சஷீர் தலிபான்களிடம் வீழவில்லை. இது கடினமான சூழல்தான். தலிபான், பாகிஸ்தான், அல்கொய்தா, பிற பயங்கரவாத குழுக்களின் கூட்டு படையெடுப்பை எதிர்த்து சண்டையிட்டு வருகிறோம். நாங்கள் சில நிலப்பகுதிகளை பிடித்துள்ளோம், எதையும் இழக்கவில்லை. தலிபான்கள் போர் குற்றத்தை தொடர்ந்து செய்கின்றனர். வயதானவர்களை கன்னி வெடிகளை அப்புறப்படுத்த பயன்படுத்துகின்றனர். மனிதாபிமான உதவிகள், தொலைபேசி இணைப்புகள், மின்சாரம், மருந்து அனைத்தையும் துண்டிக்கின்றனர். ஐக்கிய நாடுகளும் பிற உலகத் தலைவர்களும், தலிபான்களின் குற்றவியல், பயங்கரவாத நடத்தைகள் குறித்து கவனத்தில் கொள்ள வேண்டும்' என தெரிவித்துள்ளார்.

# குழந்தை கடத்தலில் அமெரிக்க நிர்வாகம்



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானை சேர்ந்த பெண் குழந்தைகளை வயதான ஆண்களுக்கு கட்டாய திருமணம் செய்து வைத்ததாக அமெரிக்க அதிபர் ஜோ பிடனின் நிர்வாகம் மீது ஒரு குற்றச்சாட்டு வைக்கப்பட்டுள்ளது. இதற்காக அக்குழந்தைகள் அபுதாபிக்கு அழைத்து செல்லப்பட்டனர். குழந்தைகள் அந்த வயதானவர்களால் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானார்கள் என அசோசியேட்டட் பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது. இது அமெரிக்காவில் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்த தகவல் தர, அமெரிக்க வெளியுறவுத்துறை மறுத்துவிட்டது. எனினும் பல்வேறு துறைகளிடம் இருந்து இவ்விவகாரம் தொடர்பாக அவசர வழிகாட்டுதல்களை கோரியுள்ளது. செனட்டர் டெட் குரூஸ், 'இது உண்மையில் அமெரிக்க அரசாங்கத்தால் நடத்தப்படும் குழந்தை கடத்தல் அல்லவா?, அமெரிக்க நிர்வாகம், குழந்தை மணப்பெண்கள் முறையை நமது ராணுவ தளங்களிலும் கொண்டு வந்துவிட்டது' என கூறினார். திரைப்படத் தயாரிப்பாளர் தினேஷ் டிசோசா, முன்னாள் ட்ரம்ப் ஆலோசகர் ஸ்டீவ் கோர்டெஸ் உள்ளிட்டோரும், பிடென் நிர்வாகத்தின் இந்த செயலை கடுமையாக சாடியுள்ளனர்.

# ஆயுதத் தகவல்கள் அழிப்பு



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானில் 85 பில்லியன் மதிப்பிலான போர் தளவாடங்களை தலிபான் பயங்கரவாதிகளிடம் தாரைவார்த்துவிட்டு பின்வாங்கிய ஜோபிடென் தலைமையிலான அமெரிக்க நிர்வாகம், அந்த ஆயுதங்கள் குறித்தத் தகவல்களை ஃபெடரல் பாதுகாப்பு ஏஜென்சிக்களின் வலைத்தளங்களிலிருந்து நீக்கியுள்ளது. ஜோ பிடென் நிர்வாகம் மீது உலக நாடுகள், அந்நாட்டு மக்கள், ராணுவ வீரர்கள் என அனைவரும் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர். ஆனால், ஜோ பிடன், தனது நடவடிக்கையை நியாயப்படுத்தி, 'இது ஆப்கானிய நட்பு நாடுகளை பாதுகாக்கும் நடவடிக்கை' என்று கூறி வருகிறார். அமெரிக்க ராணுவம் விட்டு சென்ற பிளாக் ஹாக் ஹெலிகாப்டர், துப்பாக்கிகள், சிறிய தூர ஏவுகணைகள் உள்ளிட்ட நவீன ராணுவ தளவாடங்களை தலிபான்கள் பயன்படுத்தும் வீடியோக்கள் சமூக வலைத் தளங்களில் பரவி வருகின்றன.

# வலையில் சிக்கிய மீம்கள்



# வ.உ.சிதம்பரம் பிள்ளை



விஜயபாரதம்

செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள, ஓட்டப்பிடாரத்தில் 1872 செப்டம்பர் 5ம் தேதி பிறந்தார். வ.உ.சியின் தந்தை அப்போதே பாரதத்தில் பிரபலமான வழக்கறிஞர். வ.உ.சியும் தனது கல்வி முடிந்து, தந்தையின் வழியில் வழக்கறிஞரானார். வ.உ.சி, ஏழை மக்களின் மீது கொண்ட அனுதாபத்தால் இலவசமாக வாதாடினார். தனது சிறப்பான வாத திறமையினால் பல வழக்குகளில் வெற்றி கண்டார். சிறந்த வழக்கறிஞர் என்ற பெயர் பெற்றார்.

நாட்டின் அடிமைத்தனத்தை நீக்க பாலகங்கதர திலகரின் வழியில் 1905ல் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். பாரதத்தில் சுதேசி இயக்கம் தலைதூக்கிய அந்நேரத்தில், லாலா லஜபதி ராய், பால கங்காதர திலகர், போன்ற பலரும் ஆங்கிலேய வர்த்தக வற்புறுத்தலுக்கு முற்று புள்ளி வைக்க முயற்சித்தனர். ஆங்கிலேயர்களின் தமிழகம் இலங்கை இடையிலான கப்பல் போக்குவரத்தில் கட்டண கொள்ளைக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பினார் வ.உ.சி. ஆங்கிலேயர்களுக்கு எதிராக கப்பல் விடுவதை வணிகமாக மட்டும் அவர் பார்க்கவில்லை. அதனைக்கொண்டு சுதந்திர உணர்வை ஏற்படுத்தினார். நண்பர்கள் உதவியுடன் இரண்டு கப்பல்கள் வாங்கி கப்பல் போக்குவரத்தை தொடங்கினார். ஆங்கிலேயர்களுக்கு இதனால் வருமான இழப்பு ஏற்பட்டது.

தூத்துக்குடி கோரல் மில்ஸ் தொழிலாளர்களுக்காக போராட்டம் நடத்தினார். இதனால், அரசுக்கு எதிராக செயல்படுவதாக குற்றம் சாட்டி, அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர். இரட்டை ஆயுள் தண்டனை வழங்கினர். வழக்கறிஞர் உரிமம் பறிக்கப்பட்டது. சிறைச்சாலையில் செக்கு இழுக்க வைத்து சித்தரவை செய்தனர். அதனால் அவருக்கு 'செக்கிழுத்த செம்மல்' என்ற பெயரும் உண்டு. எனினும் சிறையில் இருந்தே தனது சட்ட மனுக்கள் மூலம் சுதேசி நடவடிக்கைகளை தொடர்ந்தார். சுயசரிதையை எழுதினார். ஜேம்ஸ் ஆலன் புத்தகங்களை தமிழில் மொழி பெயர்த்தார். திருக்குறள், தொல்காப்பியத்திற்கு உரை எழுதினார்.

கடின உழைப்பால் உடல்நிலை பாதிக்கப்பட்டது. ஆங்கிலேயர்கள் வ.உ.சியை விடுதலை செய்தனர். ஏழ்மை நிலையால், மனைவி மக்களுடன் சென்னையில் குடியேறினார். மண்ணெண்ணெய் வியாபாரத்தை தொடங்கினார். இரக்க குணத்தால் அதில் அவர் வெற்றி பெறவில்லை. செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தும் வசதியாக வாழாமல், சிறை, போராட்டம் என தன் வாழ்நாள் முழுவதும் தேச விடுதலைக்காகவே உழைத்த வ.உ.சி, 1936, நவம்பர் 18ல் தூத்துக்குடியில் காலமானார்.

# சர்வ பள்ளி ராதாகிருஷ்ணன்



விஜயபாரதம்

டாக்டர் ராதாகிருஷ்ணன்' என்றழைக்கப் படும் 'சர்வபள்ளி ராதாகிருஷ்ணன்' சுதந்திர பாரதத்தின் முதல் குடியரசுத் துணைத் தலைவராகவும், இரண்டாவது குடியரசுத் தலைவராகவும் பதவி வகித்தவர். ஆசிரியராகத் தன் பணியைத் தொடங்கி, எண்ணற்ற டாக்டர் பட்டங்களையும், நாட்டின் மிக உயரிய ஜனாதிபதி பதவியை அடைந்த டாக்டர் ராதாகிருஷ்ணன் பிறந்த நாள் 'ஆசிரியர் தினமாக' செப்டம்பர் 5ம் தேதி, பாரதத்தில் ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிறது.

டாக்டர் ராதாகிருஷ்ணன் 1888 செப்டம்பர் 5ம் தேதி திருத்தணி அருகே உள்ள சர்வபள்ளி என்ற கிராமத்தில் பிறந்தார். தெலுங்கைத் தாய்மொழியாக கொண்ட ராதாகிருஷ்ணன் தன் இளமைக் காலத்தைத் திருத்தணியிலும், திருப்பதியிலும் கழித்தார். ராதாகிருஷ்ணன், 1909ல் சென்னை பிரசிடென்சி கல்லூரியில் உதவி விரிவுரையாளராகவும் 1918ல் மைசூர் பல்கலைக்கழகத்தின் தத்துவ பேராசிரியராகவும், 1921ல் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் தத்துவப் பேராசிரியராகவும் பணி புரிந்துள்ளார்.

1923ல் இவரின் படைப்பான "இந்திய தத்துவம்" வெளியிடப்பட்டது. ஹிந்து மதத் தத்துவங்கள் பற்றி விரிவுரைகள் வழங்க, ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகம், ராதாகிருஷ்ணனுக்கு அழைப்பு விடுத்தது. அவர் தனது சொற்பொழிவுகளை பாரதம் சுதந்திரத்திற்கு ஒரு ஆயுதமாக பயன்படுத்தினார். மேற்கத்திய சிந்தனையாளர்களின் அனைத்து கூற்றுகளும் பரந்த கலாச்சாரத்தில் இருந்து இறையியல் தாக்கங்கள் சார்புடையதாகவே உள்ளது என்று வாதிட்டார். பாரதத் தத்துவங்களைத் தரமான கல்வி வாசகங்கள் உதவியுடன் மொழிப்பெயர்த்தால், மேற்கத்திய தரங்களையும் மிஞ்சும் என்றுரைத்தார்.

1931ல் ராதாகிருஷ்ணன், ஆந்திரப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகவும், 1939ல் காசி ஹிந்து பல்கலைகழகத்தின் துணை வேந்தராகவ்ம் நியமிக்கப்பட்டார். 1946ல் யுனெஸ்கோவின் தூதுவராக நியமிக்கப்பட்டார். சுதந்திரத்திற்குப் பிறகு 1948ல் டாக்டர் ராதாகிருஷ்ணன் பல்கலைக்கழகக் கல்வி ஆணையத் தலைவரானபோது. இந்தியக் கல்வி முறையின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், சிறப்பான கல்வித் திட்டத்தை வடிவமைக்கவும் இவரது குழுவின் பரிந்துரைகள் உதவியது.

டாக்டர் ராதாகிருஷ்ணன், 1949ல் சோவியத் யூனியன் தூதராக நியமிக்கப்பட்டார். 1952ல் முதல் குடியரசு துணைத் தலைவராக ராதாகிருஷ்ணன் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1954ல், பாரத அரசு அவருக்கு 'பாரத ரத்னா' விருதினை வழங்கியது. இரண்டுமுறை துணை ஜனாதிபதியாகப் பணியாற்றிய பிறகு, 1962ல் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1967ல், ஜனாதிபதி பதவியிலுருந்து ஓய்வுப் பெற்று சென்னையில் குடியேறினார். ராதாகிருஷ்ணன், தனது 86வது வயதில், 1975 ஏப்ரல் 17ம் தேதி சென்னையில் காலமானார்.